**மாநில மனித உரிமைகள் ஆணையம், தமிழ் நாடு**
**143, பி. எஸ். குமாரசாமி ராஜா சாலை, (கிரீன்வேஸ் சாலை),**
**சென்னை – 600 028.**

## வேலை வாய்ப்பு அறிவிப்பு எண்.1/2018 நாள்:11.09.2018.

மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் அலுவலகத்தில், ஒரு தட்டச்சர் மற்றும் இரண்டு அலுவலக உதவியாளர், பணியிடத்தினை நிரப்பும் பொருட்டு தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

விண்ணப்பிப்பவர்கள் கீழ்க்கண்ட மாதிரி விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து பின்வரும் சான்றிதழ்களின் நகல்களை தானே கையொப்பமிட்டு (Self Attested) இணைத்து அனுப்பவேண்டும்.

1) வயது மற்றும் கல்விச்சான்றிதழ் – (வயது குறிப்பிடப்பட்ட கல்விச்சான்றிதழ்/ அரசு சார்ந்த அமைப்பு வழங்கிய பிறப்பு சான்றிதழ்)
2) தொழிற்கல்விச் சான்றிதழ்
3) பணிமுன்அனுபவச்சான்றிதழ்
4) சாதிச்சான்றிதழ். (வருவாய்த் துறையினரால் வழங்கப்பட்ட சான்றிதழ்)
5) அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமிருந்து (Gazetted Officer) பெறப்பட்ட மனுதாரரின் புகைப்படத்துடன் கூடிய நன்னடத்தை சான்றிதழ், புகைப்படமும் ஒப்புகை செய்து (Attested) **அசல் சான்றிதழ்** அனுப்பப்படவேண்டும்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் செயலாளர், மாநில மனித உரிமைகள் ஆணையம், தமிழ்நாடு, எண்.143, பி.எஸ். குமாராசாமி ராஜா சாலை, (கிரீன் வேஸ் சாலை) சென்னை–28 என்ற முகவரிக்கு பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் அனுப்பி வைக்கப்படவேண்டும். விண்ணப்பம் இவ்வலுவலகத்தில் பெறுவதற்கான கடைசி நாள் 01..10.2018.

எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பம் நேரில் பெறப்படமாட்டாது 01.10.2018 தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும், சரிவர பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது. விண்ணப்பத்தினை சரியாக பூர்த்தி செய்து அனுப்புவதும் தேர்வின் ஒரு அங்கமாகும். தனியரின் சான்றிதழ்களின் பரிசீலனைக்கு பின்னர் தகுதியானவர்களுக்கு மட்டும் தபால் மூலம் தேர்வு/நேர் காணலுக்கான தகவல் தெரிவிக்கப்படும்.

| வ. எண். | பதவியின் பெயர் | சம்பள விகிதம் | வயது | கல்வித்தகுதி | சான்றிகழ்கள் | இட ஒதுக்கிடு மற்றும் காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | தட்டச்சர் | அடிப்படை ஊதியம் ரூ.19500 – 62000 (Cell-1 Level-8, 7th ஊதிய குழுவின் படி) | அ) 18 வயது நிறைவு பெற்றிருக்கவேண்டும் <u>அதிக பட்ச வயது</u> அ) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தபட்டோர் மற்றும் சீர்மரபினர். -32. ஆ) பட்டியல் பிரிவினர் -35. | 1) அரசு கல்வித் துறை இயக்குநரால் நடத்தப்பட்ட உயர் நிலை பள்ளித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் (10ம் வகுப்பு) 2) தட்டச்சு i) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்நிலை அல்லது ii) தமிழ் –உயர்நிலை ஆங்கிலம்–இளநிலை அல்லது iii) தமிழ் –இளநிலை, ஆங்கிலம் –உயர்நிலை தகுதி பெற்றிருக்க வேண்டும் மேலும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளநிலை பட்டப்படிப்பு தேர்ச்சிப் பெற்றிருப் பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | 1) பள்ளி மற்றும் கல்லூரி கல்விச் சான்றிதழ், நன்னடத்தை சான்றிதழ். 2) தட்டச்சு சான்றிதழ், 3) வயது சான்றிதழ். 4) சாதிச் சான்றிதழ். 5) இன்னா ரென்று தெரிவுபடுத்தும் அரசு அதிகாரியின் கையொப்பமிட்ட அடையாளச் சான்றிதழின் அசல். | 1) பட்டியல் பிரிவு = 1 (அருந்ததியனார்/முன்னுரிமை அடிப்படையில். |
| 2, | அலுவலக உதவியாளர் | சம்பள விகிதம் ரூ.15700 – 50000 (Cell-1 Level-1, 7th ஊதிய குழுவின் படி) | அ) 18 வயது நிறைவு பெற்றிருக்கவேண்டும் <u>அதிக பட்ச வயது</u> அ) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தபட்டோர் மற்றும் சீர்மரபினர். -32. ஆ) பட்டியல் பிரிவினர் -35. | 1) 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தல் வேண்டும் 2) மிதி வண்டி ஓட்டத்தெரிந்திருக்க வேண்டும் | 1. பள்ளிக் கல்விச் சான்றிதழ். 2. சாதிச் சான்றிதழ் 3. இன்னா ரென்று தெரிவுபடுத்தும் அரசு அதிகாரியின் கையொப்பமிட்ட அடையாளச் சான்றிதழ் | 1) பட்டியல் பிரிவு = 1 (அருந்ததியனார்/முன்னுரிமை அடிப்படையில். 2) மிகவும் பிற்படுத்தபட்டோர் . = 1 ----- மொத்தம் காலியிடங்கள் = 2 ------ |

ஒப்பம்/–
செயலாளர்
மாநில மனித உரிமைகள் ஆணையம்

Photo

# மாதிரி விண்ணப்பப் படிவம்

1) விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் :

2) விண்ணப்பதாரரின் சாதி மற்றும் மதம் :

3) விண்ணப்பதாரரின் பெயர் :

4) தகப்பனார்/கணவர் பெயர் :

5) பிறந்த தேதி மற்றும் வயது :

6) கல்வி (ம) தொழில் கல்வியின் விவரம் :

7) நிரந்தர முகவரி :

8) தகவல் அனுப்பபடவேண்டிய முகவரி :

9) பணி முன் அனுபவம் :

10) இணைத்துப் அனுப்பபடுகின்ற சான்றிதழ்களின் விவரம் :

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**